இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 205 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 22 – வியாழக்கிழமை 06 மார்ச் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 205 : Thiruvalluvar Year - 2056 - Maasi 22 - Thursday 06 March 2025 - Dak 16 Pages ₹ 5.00

## ஒன்றிய அரசின் நடவடிக்கையால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு அச்சுறுத்தல்!

# தொகுதி மறுசீரமைப்பை 30 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கவேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கொண்டு வந்த தீர்மானம்! ஒருமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, மார்ச் 6 -**

**நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு - மாநில உரிமையை காப்பது தொடர்பாக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஒன்றிய அரசின் நடவடிக்கையால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என்றும், "தொகுதி மறுசீரமைப்பை 30 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க வேண்டும்" என்றும் தீர்மானத்தை விளக்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.3.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு மாநில உரிமையை காப்பது தொடர்பாக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும் மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒரு விவகாரத்தில் முடிவெடுப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். கட்சி வேறுபாடுகளை கடந்து, அழைத்திருப்பது யார் என்று பார்க்காமல் எவ்வளவு முக்கியமான பிரச்சினைக்காக அழைத்திருக்கிறோம் என்று மனதில் வைத்துக் கொண்டு இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மிகப்பெரிய உரிமைப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்!**

தமிழ்நாடு அரசின் சார்பில், உங்கள் எல்லோரையும் வருக... வருக... என்று நான் வரவேற்கிறேன்.

● தமிழ்நாடு மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை உணர்த்துவதற்காகத்தான், இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

● தொகுதி மறுசீரமைப்பு எனும் கத்தி தென்னிந்தியாவின் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டு இருக்கிறது. இதனால், தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறது.

● இன்றைக்கு தமிழ்நாட்டில் மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கிறது. இதை குறைக்கின்ற அபாயம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. ஒன்றிய அரசு 2026ஆம் ஆண்டில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை மறுசீரமைப்பு செய்யப் போகிறது. பொதுவாக, இதை மக்கள்தொகையை கணக்கிட்டுத்தான் செய்வார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.3.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு – மாநில உரிமையை காப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாட்டில் வெற்றிகரமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள்!**

● மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது இந்திய நாட்டின் மிக முக்கியமான இலக்கு! அந்த இலக்கில் நம்முடைய தமிழ்நாடு வெற்றி பெற்றிருக்கிறது. பல பத்தாண்டுகளாக, வெற்றிகரமான குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள், பெண்கள் கல்வி மற்றும் சுகாதார முன்முயற்சிகள் மூலமாக நாம் இதை சாதித்திருக்கிறோம்.

> **தொ**குதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானதாக இல்லை என்றும், அதே சமயம் கடந்த ஐம்பதாண்டுகளாக சமூக பொருளாதார நலத்திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது எனவும் அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

● தற்போது இருக்கின்ற 543 நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்தால், மக்கள் தொகை குறைவாக இருப்பதால், நம்முடைய தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வாய்ப்பிருக்கிறது. தமிழ்நாடு மொத்தமாக 8 மக்களவை இடங்களை இழக்கும் என்று சொல்கிறார்கள். அதாவது இனி தமிழ்நாட்டுக்கு 39 எம்.பி.க்கள் கிடைக்க மாட்டார்கள்; 31 எம்.பி.க்கள் தான் இருப்பார்கள்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற 58 கட்சிகள்!

**சென்னை, மார்ச் 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் 58 கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றனர்.**

ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை என்ற பெயரில் வடமாநிலங்களில் நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள் தொகை அடிப்படையில் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் மக்கள் தொகையைக் காட்டி தொகுதிகளைக் குறைத்திட வஞ்சகத்தோடு நிறைவேற்றத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க.வின் திட்டத்தை முறியடித்திட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பினை ஏற்று நேற்று (5.3.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 58 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றோர் விபரம் வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஆர்.எஸ்.பாரதி, பி.வில்சன் எம்.பி., திராவிடர் கழகம் சார்பில் ஆசிரியர் கி.வீரமணி, இந்திய யூனியன் முஸ்லிம் கட்சி சார்பில் பேரா. கே.எம்.காதர்மொகிதீன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் ஈ.ஆர்.ஈஸ்வரன், பா.ம.க. சார்பில் மரு.அன்புமணி, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் என்.ஆனந்தன், அனைத்திந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம் சார்பில் வி.டி.பாண்டியன்,

சமதா கட்சி மணிவண்ணன், புரட்சி பாரதம் கட்சி சார்பில் எம். ஜெகன்மூர்த்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இரா.முத்தரசன், என். பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் (மார்க்சிஸ்ட்) சண்முகம், சச்சிதானந்தம் எம்.பி,

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில்முனைவர்தொல்.திருமாவளவன் எம்.பி., ரவிக்குமார் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சி சார்பில் எம்.எச். ஜவாஹிருல்லா, தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் தி.வேல்முருகன், மக்கள் நீதி மையம் சார்பில் கமலஹாசன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஜெயக்குமார், தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் வி.இளங்கோவன், பார்த்தசாரதி, எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பில் பி.எம்.எஸ்.முகமது முபாரக், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் ஜி.செந்தமிழன், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் பி. ஜான்பாண்டியன், இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் சார்பில் மூன்றெழுத்து (எ) அருள்ராமன், சீனிவாசன், இந்திய ஜனநாயக கட்சி சார்பில் டி.ஆர்.பாரிவேந்தர்,

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி சார்பில் பொன்.குமார், மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் தமிமுன் அன்சாரி, பெருந்தலைவர் மக்கள் கட்சி சார்பில் என்.ஆர்.தனபாலன், பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் பன்னீர்செல்வம், இந்திய குடியரசு கட்சி சார்பில் சே.கு.தமிழரசன், ஆதித்தமிழர் பேரவை சார்பில் ஆர்.அதியமான், முக்குலத்தோர் புலிப்படை சார்பில் கருணாஸ், தமிழக மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் கே.எம்.செரீப், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (விடுதலை) சார்பில் ஆசைதம்பி, கொங்கு இளைஞர் பேரவை சார்பில் தனியரசு, தமிழ் புலிகள் கட்சி சார்பில் நாகை திருவள்ளுவன், பசும்பொன் தேசிய கழகம் சார்பில் ஜோதி முத்து ராமலிங்கம், மக்கள் விடுதலைக் கட்சி சார்பில் எஸ்.கே.முருகவேல், ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி ஜி.பி.கதிரவன், இந்திய தேசிய கட்சி சார்பில் அற்புதராஜ், பஷீர் அகமது, வன்னியர் கூட்டமைப்பு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்ற கட்சி சார்பில் சி.என். ராமமூர்த்தி, சமத்துவ மக்கள் கழகம் சார்பில் எர்ணாவூர் நாராயணன், ஆதித்தமிழர் கட்சி சார்பில் கூ. ஜக்கையன், புதிய திராவிடர் கழகம் சார்பில் கே.எஸ்.ராஜ் கவுண்டர், ஆம் ஆத்மி கட்சி சார்பில் வசீகரன், தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பில் க.சக்திவேல், அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி சார்பில் டாக்டர் வி.எஸ்.ஐசக் ஐயா, தமிழ்நாடு இளைஞர் கட்சி காமேஸ்வரன், மண்ணின் மைந்தர்கள் கழகம் சார்பில் சேனாதிபதி, முனைவர் ஆ.சா.செல்வராஜ், தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் எம்.எஸ்.ரவி, தமிழர் தேசிய முன்னணி சார்பில் கணேசன், தமிழ் தாயக மக்கள் முன்னேற்ற கட்சி சார்பில் எம்.முகமது இலியாஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் சார்பில் டாக்டர் ராஜா என்கிற பக்ருதீன் அலி அகமது, தேசிய முன்னாள் ராணுவ வீரர்கள் கட்சி சார்பில் கே.அ.சுரேஷ் பாபு, அண்ணா எம்.ஜி.ஆர். திராவிட மக்கள் கழகம் சார்பில் டாக்டர் முத்துராமன், சிங்கப்பெருமாள், கலப்பை மக்கள் இயக்கம் சார்பில் பி.டி.செல்வகுமார், டாக்டர் எம்.ஜி.ஆர். குடியரசு கட்சி சார்பில் ஜே.ஹரிபிரசாத், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் சார்பில் ஸ்ரீதர் வாண்டையார் உள்பட 58 கட்சியினர் பங்கேற்றனர்.